# தொல்காப்பியம் — களவியல்

## களவியல் — விளக்கம்

தலைவன், தலைவியரின் காதல் வாழ்வினை விளக்கிக் கூறுவது களவியல் ஆகும். இல்லறமாகிய வாழ்வியலுக்கு ஆதாரமாக அமைவதாகும். இம்மையில் வாழ்வாங்கு வாழ்ந்து மறுமையில் வீடுபேற்றை அடைவதற்குத் துணைநிற்பது இக்களவு ஒழுக்கமாகும்.

இன்பம், பொருள், அறம் என்று சொல்லப்படுகின்ற உறுதிப்பொருள்களாக விளங்குவது அன்பாகும். இந்த அன்புடைப் புணர்தல் அன்பின் ஐந்திணையாகும். இது அறத்தின்வழி நிகழ்வது. களவு, கற்பு என்னும் இருவகை நிலைகளை உடையது.

## எட்டு வகைத் திருமணங்கள் :

1. பிரமம்
2. பிரசாபத்தியம்
3. ஆரிடம்
4. தெய்வம்
5. காந்தருவம்
6. அசுரம்
7. இராக்கதம்
8. பைசாசம்

1. பிரமம்

தன்னிறைய அணிகலன் அணிவித்து பிரமச்சாரியாய் இருக்கும் ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பது.

2. பிரசாபத்தியம்:

பெண்ணைத் திருமணம் செய்வதற்குரிய குலத்தார் பெண் கேட்ட வழிப் பெண்ணின் பெற்றோர் விரும்பி பெண்ணைக் கொடுப்பது.

3. ஆரிடம்

மணமகனிடமிருந்து ஒன்றோ இரண்டோ ஆவும் ஆனேறும் வாங்கிக் கொண்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பது.

4. தெய்வம்

வேள்வித்த ஆசிரியராய் இருந்த பலருள்ளும் ஒருவருக்குப் பெண்ணை அவ்வேள்வித் தீயின் முன்னர்த் திருமணம் செய்து கொடுப்பது.

5. காந்தர்வம்

தேவ சாதியைச் சார்ந்த ஒத்த பண்புடையவர் கந்தர்வக் குமாரனும் கந்தர்வக் கன்னியும் ஆவர். அவர்கள் இருவரும் கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தாமே கூடும் கூட்டம்.

6. ஆசுரம்

வில்லேற்றுதல், திரிபன்றி வீழ்த்துதல், கொல்லேறு தழுவுதல் போன்ற வீரச் செயல்களில் ஈடுபடும் வலியவர்க்குப் பெண்ணைக் கொடுக்கக் கருதுவர்.

எ.டு

| வில்லேற்றல் – இராமன் |
| --- |

| திரிபன்றி வீழ்த்தல் – அருச்சுனன் |
| --- |

7. இராக்கதம் :

தான் விரும்பிய பெண் தன்னை விரும்பாத நிலையில் அவளின் விருப்பமின்றியும் அவளின் பெற்றோரின் விருப்பமின்றியும் வலிமையால் அப்பெண்ணைக் கவர்ந்து வந்து திருமணம் செய்து கொள்வது.

8. பைசாசம்

வயதில் முதிர்ந்தவர், கள்ளுண்டு களிப்பவர், உறக்கத்தில் இருப்பவர் போன்றவரோடு உவந்து கூடுவது.